பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 28 சனிக்கிழமை 10.04.2021 கதிர் 24

## சாரதிகள் மீது விசேட கவனம்



சித்திரைப் புத்தாண்டு வாரத்தை முன்னிட்டு, சகல பிரதேசங்களிலும் வாகன சாரதிகள் மீது விசேட கவனம்

☞2

# யாழ். மேயர் மணியின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல!

## காவல் படையின் சீருடையே காரணமாம் பொலிஸ் பேச்சாளர் றோஹண விளக்கம்



**யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் அரசியல் பழிவாங்கல் எதுவுமில்லை. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளை தூய்மையாகப் பேணுவதற்காகக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் சீருடை தொடர்பான குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெறும்.**

**- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.**

☞2



## விரைவில் வரும் வரையறையற்ற இணைய வசதி

வரையறையற்ற இணைய சேவைகளை வழங்குவதற்காகத் தொடர்புடைய சேவை வழங்குநர்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகத்துக்குத் தங்களது திட்டங்களைச்

☞2

## தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அரசியல் இலாபம் தேடும் அரசு

### யாழ். மாநகர மேயரின் கைதுக்கு முன்னாள் எம்.பி. சரா கண்டனம்



பெரும்பான்மையினமக்கள் மத்தியில் சரிந்து செல்லும் தனது செல்வாக்கை மீட்பதற்கான கோட்டாபய அரசின் திட்டமே யாழ்ப்பாணம் மாநகர மேயரின் கைது. புலிப் பூச்சாண்டி காட்டி தங்கள் வாக்கு வங்கியைக் கட்டியெழுப்பும் ராஜபக்ஷக்களின் வழமையான உத்தியே இது. தங்கள் அரசியல் நலனுக்காக தமிழ் மக்களை இவ்வாறு அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

☞2

## யாழ். நகரில் 5 லட்சம் ரூபா பணம் களவாடல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் வங்கி நடவடிக்கைக்காக வந்த ஒருவரது மோட்டார் சைக்கிளுக்குள் இருந்த 5 இலட்சம் ரூபா பணம் ஆசாமி ஒருவரால் களவாடப்பட்டது.

குறித்த பணத்தை வெகோ ரக மோட்டார் சைக்கிளுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு வங்கியின் முன்பாக நிறுத்தி விட்டு வங்கி நடவடிக்கையால் வந்தவர் அங்கிருந்து இன்னுமோர் வங்கியில் பணத்தை வைப்பிலிட குறித்த பணத்தைப் பார்வையிட்ட வேளையிலேயே பணம் களவாடப்பட்ட விடயம்

☞2

## வீதிப் பெயர்ப்பலகையால் கிளிநொச்சியில் சர்ச்சை!

### அகற்றுமாறு பொலிஸார் உத்தரவு




(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், சாந்தபுரம் கிராமத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் திறக்கப்பட்ட வீதியின் பெயர்ப் பலகை விவகாரம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் இன்று விசாரணை மேற்கொண்டனர்.

☞2

## குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபா புத்தாண்டுக் கொடுப்பனவு

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக, தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைகளின் பிரகாரம் இவ்வாறு கொடுப்பனவுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடு முழுவதும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக பொருளாதார நலிவுற்ற குடும்பங்களுக்கு நிவாரணம், 5,000 ரூபா கொடுப்பனவு போன்றன வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் புத்தாண்டை முன்னிட்டு இந்தக் கொடுப்பனவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை முதல் எழுமாறாக பி.சி.ஆர்.

தமிழ்-சிங்களப்புத்தாண்டை முன்னிட்டுகொரோனாவைரஸ் பரவலைத் தடுக்கும் பொருட்டு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் மட்டுமன்றி நாடு முழுவதும் இவ்வாறு

☞2

## புதிய கொத்தணியை உருவாக்க வேண்டாம்

### சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான - கட்டுப்படுத்துவதற்கான சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின்தலைவர் உபுல்ரோஹண கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புத்தாண்டை முன்னிட்டு நகரப் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட

☞2

## மதமாற்றத் தடையைக் கோரி 'சிவசேனை' உண்ணாவிரதம்



புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் இந்து மதத்துக்கு முன்னுரிமை வழங்கக் கோரி, இலங்கையின் 12 மாவட்டங்களில் இன்று காலை முதல் மாலை வரை உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிவசேனை அமைப்பின் ஸ்தாபகர் மறவன்புலவு

☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன்பொலிஸார்மற்றும்பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆகியோரினால் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரின் கைது தொடர்பில் விடுத்துள்ளகண்டனஅறிக்கையிலேயே ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ள தாவது:-

தமிழர் தரப்பில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் இதுவரை பிரயோகிக்காத ஓர் அதிகாரத்தை - அதை விரிவாக பொருள்கோடல் செய்து வி. மணிவண்ணன் முதற்தடவையாகப் பிரயோகித்துள்ளார். அது சிங்கள தேசத்தை கிலிகொள்ளச் செய்துவிட்டது. அவர்களுக்கு சீருடையோ, அதன் நிறமோ பிரச்சினையல்ல. அதிகாரப் பிரயோகிப்பை ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அரசுக்குத் தெற்கில் தேய்ந்து செல்லும் தங்கள் வாக்குவங்கியை தூக்கி நிறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தினால் அவர்கள் படுதோல்வியைச் சந்திக்க நேரும். அதனால் தங்கள் வழமையான உத்தியை இப்போதும் ஆரம்பித்துவிட்டனர்.

போரில் வென்றோம் என்று கூறி 2010ஆம் ஆண்டு பெரும்பான்மையின வாக்குகளைப் பெற்றனர். ஈஸ்டர் தாக்குதலை முன்னிறுத்தி 2019ஆம் ஆண்டு தேர்தலில் வென்றார்கள். இப்போது தங்கள் வாக்கு வங்கியை அதிகரிக்க மீண்டும் புலிப் பூச்சாண்டியைக் கையில் எடுத்திருக்கிறார்கள்.

மாற்றுக் கருத்தாளர்கள், தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் என அனைவரையும் அடக்கி ஒடுக்கவே இப்போதைய அரசு விரும்புகின்றது. ஊடகங்கள் மீதான வழக்குகள், நகர மேயர் கைது என்று இந்த அரசின் அடக்குமுறைப் போக்கு நீள்கின்றது. தமிழ் மக்கள் நிம்மதியாக மூச்சு விடக் கூடாது என்பதுதான் அவர்களின் சிந்தனையாகவுள்ளது.

தங்களின் இந்த நோக்கத்துக்காக, உலக நாடுகளால் மிக மோசமான சட்டம் என்று சொல்லப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு கையில் எடுத்திருக்கின்றது. இந்தச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று பல நாடுகள் வலியுறுத்தும் நிலையில், தற்போதைய அரசு தொடர்ந்தும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை ஒடுக்க முயல்கின்றது. அரசின் இந்தப் போக்கை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இப்படியான மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், உயிர்க் கொலைகளைக் கண்டு அடங்கியிருந்து இருந்தால் இப்போது இந்தத் தீவில் தமிழர்கள் என்ற இனமே இருந்திருக்காது. அராஜக அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் தமிழர்களாக ஒன்றிணைந்து குரல் கொடுப்போம். - என்றுள்ளது.

## யாழ். மேயர் மணியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீருடையையொத்தது. இதுதமிழீழவிடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

குறித்த ஊழியர்கள், யாழ். மாநகர மேயரின் தனிப்பட்ட சிபார்சில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கான சீருடையும் மேயரின் பணிப்புரையின் பேரிலேயே வழங்கப்பட்டுள்ளது எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் அவரை மீண்டும் யாழ்ப்பாணம் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

நேற்றிரவு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் மீது தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெறும் - என்றார்.

## சாரதிகள் மீது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செலுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் இன்று முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் அதிகம் விபத்துக்கள் ஏற்படுவது வழமை. ஆகவே இவ்வாறு ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## விரைவில் வரும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமர்ப்பித்துள்ளனர்.

இதனடிப்படையில் எதிர்வரும் வாரம் முதல் குறித்த பக்கேஜை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இணையதள சேவை வழங்குநர்கள் சமர்ப்பித்த திட்டங்களைப் பரிசீலித்த பின்னர், அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதனூடாக கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துபவர்களுக்கு அதிவேக இணைய வசதிகளைத் தொடர்ந்து வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ். நகரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவந்துள்ளது.

இதையடுத்து பணம் களவாடப்பட்ட இடம் அருகே இருந்த வர்த்தக நிலையத்தில் பொருத்தியிருந்த சி.சி.ரி.வி. கமராவைப் பரிசோதித்த வேளையில் வங்கி முன்னாள் தொலைபேசியில் உரையாடியவாறு நின்ற இளைஞர் ஒருவர் வெகோவில் இருந்த பணத்தை எடுத்துச்செல்வதுகண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதிப் பெயர்ப்பலகை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த வீதியின் பெயரை 'வெற்றி வீதி' எனப் பெயரிடப்பட்டு பெயர்ப்பலகையொன்று கடந்த மாதம் 28ஆம் திகதி அன்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கிளிநொச்சிப் பொலிஸார் இன்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரை அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இன்று காலை 8 மணியளவில் அழைக்கப்பட்ட தவிசாளரிடம் சுமார் ஒரு மணிநேரம் விசாரணைகள் இடம்பெற்றன என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது, குறித்த பெயருக்குச் சொந்தமானவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூகப்பணி செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரைப் பொதுமக்கள் சூட்டினர் எனவும் இன்று இடம்பெற்ற விசாரணைகளின்போது பொலிஸாருக்குத் தெரிவித்ததாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

குறித்த வீதியானது பிரதேச சபைகள் சட்டத்துக்கு அமைவாகவோ அல்லது வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவோ பிரதேச சபையால் திறந்து வைக்கப்படவில்லை எனவும், பொதுமக்கள் தாமாக முன்வந்து குறித்த வீதிக்குப் பெயர் வைக்க ஏற்பாடு செய்த நிகழ்வில் மக்கள் பிரதிநிதியாகத்தானும் கலந்துகொண்டார் எனவும் குறித்த விசாரணைகளின்போது தான் குறிப்பிட்டார் எனவும் தவிசாளர் கூறினார்.

குறித்த வீதிப்பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் வகையில் செயற்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கு அமைவாக தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தவிசாளர் மேலும் கூறினார்.

## நாளை முதல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

எனவே, அனைத்து மக்களும் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அமுல்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது நாளாந்தம் சுமார் 200 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்றும் கூறினார்.

இதேவேளை, நாளைமறுதினம் திங்கட்கிழமை விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏராளமான மக்கள் சொந்த ஊருக்குச் செல்வார்கள் என்பதால் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய கொத்தணியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகளின்போது சுகாதார நடைமுறைகள் உரியவகையில் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. எனவே, நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் புத்தாண்டின் பின்னர் சிகிச்சை நிலையத்தில் இருக்க வேண்டிய நிலைமையே உருவாகும்.

ஆகவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சுகாதார வழிகாட்டல்களை உரிய வகையில் பின்பற்ற வேண்டும் - என்றார்.

## மதமாற்றத் தடையைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சச்சிதானந்தன் ஏற்பாட்டில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இந்து மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால், மதம் மாற்றுபவர்கள் மூலம் சைவ சமயத்திலிருந்து வேறு மதத்துக்கு மக்கள் செல்லமாட்டார்கள் என்றும், பௌத்த மதமும் இந்து மதமும் பாதுகாக்கப்படும் எனவும் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கு இலங்கையில் மதமாற்றச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன எனவும், இலங்கையில் மாடுகள் வெட்டுவதை நிறுத்த வேண்டும் எனவும் சச்சிதானந்தன் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஐ.பி.எல். இன்றைய போட்டியில் சென்னை - டெல்லி மோதல்!




ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டெல்லி கபிட்டல்ஸ் அணியும் மோதவுள்ளன. இன்று இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில், சென்னை அணிக்கு டோனியும் டெல்லி அணிக்கு ரிஷப் பந்தும் தலைமை தாங்குகின்றனர். இரு அணிகளும் இது வரை 23 முறை மோதியுள்ளன. இதில் சென்னை அணி 15 வெற்றிகளையும் டெல்லி அணி 8 வெற்றிகளையும் பதிவு செய்துள்ளது.

மூன்று முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கடந்த ஆண்டு முதல்முறையாக 'பிளே- ஆப்' சுற்றுக்கு தகுதி பெறாமல் போனதுடன் 7ஆவது இடத்துக்கும் தள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# யூரோபா லீக் கால்பந்தாட்டம் ஆர்சனல் - பிராகா போட்டி சமநிலை



ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் கால்பந்துத் தொடரான யூரோபா லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆர்சனல் அணியும் செக் குடியரசின் ஸ்லாவியா பிராகாவும் மோதின.

ரேஞ்சர்ஸ் அணிக்கு எதிராக ஸ்லாவியா பிராகா அணியின் வீரர் நிறவெறிக் கருத்தினைப் பிரயோகித்ததாக எழுந்த புகாரினால், ஸ்லாவியா பிராகா அணியின் மீது ரசிகர்கள் கடுங்கோபத்தில் உள்ளனர். இதனால் உலகின் பல்வேறு அணியின் ரசிகர்களும் ஆர்சனல் அணி வெற்றி பெறுவதற்கு தங்களது ஆதரவை தெரிவித்திருந்தனர்.

டியர்னி மற்றும் ஒடேகார்ட் ஆகிய இருவரும் காயம் காரணமாக இடம்பெறாதது ஆர்சனல் அணியின் ஆட்டத்தில் எதிரொலித்தது. முதல் பாதி 0 - 0 இன்று கோலின்றி முடிவடைந்தது. தொடர்ந்து வாய்ப்புகளைத் தவறவிட்டு வந்த ஆர்சனல் அணியை ஆட்டத்தின் 87வது நிமிடத்தில் பெப்பே ஒரு கோல் அடித்து முன்னிலை பெறச் செய்தார். இறுதியாக போராடி அடித்த கோலினால் பெற்ற முன்னிலையைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாத ஆர்சனல் அணி, ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் கோல் கோட்டுத்து ஆட்டத்தை சமநிலையில் நிறைவு செய்தது. ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் ஸ்லாவியா பிராகா அணியின் ஹோல்ஸ் அந்த கோலை அடித்திருந்தார்.

கடந்த மூன்று ஆட்டங்களாக வெற்றியைப் பதிவு செய்யாத ஆர்சனல் அணி இந்தப் போட்டியையும் சமநிலையில் முடித்துக்கொண்டது.

இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்ததனால், அடுத்த போட்டியில் வெற்றி பெறுபவர்களே அரையிறுதிக்கு முன்னேறுவார்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விநோதமான அணுகுமுறை

'யாழ் நகரக் காவல் படை' என்ற பெயரில் யாழ் மேயர் வி.மணிவண்ணன் ஆரம்பித்து வைத்த திருவிழா, அவரது கைதை அடுத்து பதினெட்டு மணி நேரம் கழித்து பிணையில் விடுவிப்பு என்ற சமரசத்தோடு தற்காலிகமாக முடிவுக்கு வந்திருக்கின்றது.

புருவத்தை உயர்த்த வைக்கும் பல அதிரடித் திருப்பங்களுடன் திடுதிப்பென இந்த விவகாரம், சுமுகமாக முடித்து வைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது. அதற்கான கேள்விகளும் பதில்களும் தாராளமாகவே உள்ளன.

திரைமறைவில் நடந்தவை அம்பலமாக விட்டாலும், திரைமறைவில் காரியங்கள் நடக்காமல் இவ் விடயம் இவ்வளவு விரைவாக – இவ்வளவு சுமுகமாக – முடிவடைந்தது என்று நம்புவதற்கு இடையேயில்லை.

இலங்கையில் இன்று அதிகாரத்தில் இருக்கும் சிங்கள – பௌத்த ஆட்சிப் பீடத்தை நன்கு அறிந்த தமிழர்கள் நாம்.

தமிழர்களின் அடிப்படை உரிமைகள் விடயத்திலேயே தன்னுடைய ஏவல் படையான பொலிஸை வைத்துக் கொண்டு இந்த ஆட்சிப் பீடம் எப்படிக் காய்களை நகர்த்தும் என்பது எமக்குத் தெரியும்.

மக்களின் உணர்வெழுச்சிப் போராட்டம் என்றவுடனேயே கொரோனாத் தொற்றுத் தடுப்பு சட்ட விதிகள் அல்லது சுகாதார விதிகளைத் தூக்கிப் பிடிக்கும் பொலிஸ் துறைதான் இது.

யாழ், நகர மேயர் வி.மணிவண்ணனினால் 'யாழ் நகரக் காவல் படை' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட பணியாளர்களின் சீருடைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தின் தமிழீழக் காவல்துறைச் சீருடைகளை ஒத்திருக்கின்றன என்ற சர்ச்சையை ஏற்படுத்தி, அதனை வைத்து மேயரைக் கைது செய்தது யாழ் பொலிஸ்.

விடுதலை புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் அவர் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவரைத் தமது வவுனியா நிலையத்துக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்து விசாரித்தது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு.

ஆனால், எல்லாம் சில மணி நேரங்களில் மாறி விட்டன.

விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயன்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டு, அந்தக் காரணத்துக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவரை, யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வந்தனர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்படவில்லை. அதுவும் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார். அவர்கள் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்த சந்தேகத்தில் கைதான யாழ் மேயரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் முன்னிலையாக்குவதைத் தவிர்த்து, அவர் தண்டனை சட்டக் கோவையின் சில பிரிவுகளை மீறினார் என்று மட்டுமே குற்றம் சுமத்தி நீதிமன்றில் நிறுத்தினர்.

யாழ் மேயருக்கு நீதிமன்றம் மூலம் பிணை அனுமதி வழங்கப்படுவதை ஒப்புக்குச் சப்பாணி போல கடமைக்கு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் ஆட்சேபித்தனவே தவிர, அதைக் கடுமையாக – முறையாக – ஆட்சேபித்த மாதிரித் தெரியவில்லை.

அது மாத்திரமல்ல, யாழ் மேயரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, அதன் கீழ் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தரப்பினர் முன்னிலைப்படுத்தியிருந்தால் அவருக்கு பிணையே கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

ஆக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்படக் கூடிய ஒரு விடயத்தைப் புரிந்தார் என்று தெரிவித்து கைது செய்யப்பட்ட தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒருவரை வழக்கமாக அச் சட்டத்தின் கீழ் கண் மூடித்தனமாக வழக்குத் தாக்கல் செய்யும் முறைமை இருந்தும், அதைத் தவிர்த்து, சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தில் – அதுவும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளைத் தொடுப்பதையே பரவணிப் பழக்கமாகக் கொண்ட – அத் தடுப்புப் பிரிவு தாக்கல் செய்திருக்கின்றமை விநோதத்திலும் விநோதம்.

இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தியிருந்தாலும் யாழ் மேயருக்கு எதிராக பொலிஸ் சோடிக்கக் கூடிய குற்றச்சாட்டு ஏதும் நிரூபிக்க வாய்ப்பில்லை என்பதும் உண்மைதான். ஆனால், அதற்காக அவரைச் சிக்கலுக்குள் இழுபட விடாமல் இவ்வளவு விரைந்து பிணையில் விடுவிக்கக் கூடிய வகையில் பொலிஸார் நடத்தியிருப்பார்கள் என்று நம்புவதற்கு இடமில்லை.

விடயம் நீதிமன்றத்தில் இன்னும் உள்ளது. அதனால் விவகாரங்களைப் பச்சையாக நாம் அலச முடியாது. ஆனால் இந்த நடவடிக்கை முறைமையில் ஏதோ ஒரு வழமைக்கு மாறான போக்கு இடையில் இழுப்பதாகவே தோன்றுகின்றது. அது, மறைக்க – மறுக்க – முடியாதது என்பது சம்பந்தப்பட்டோருக்குப் புரிந்தால் சரி.

# கைதுகள் தொடர்கின்றன எச்சரிக்கின்றார் வீரசேகர



2019 ஈஸ்டர் தாக்குதல்களுக்கு தற்போது குடும்பத்தினர் உட்பட தடுப்புக் காவலில் உள்ள இப்ராஹிம் என்ற தனிநபரே நிதிப் பங்களிப்பை வழங்கியதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலை நடத்த முதல் தடவையாக இப்ராஹிம் 5 கோடி ரூபா செலவிட்டார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் இவ்வாறு வழங்கப்பட்ட நிதியில் 3 கோடி சஹ்ரானிடமும் அவரது நண்பர்களிடம் இருந்ததாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு விவாதத்தில் பேசியபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதேவேளை சந்தேகநபர்களுக்கு எந்த விதத்திலும் அரசாங்கம் நிதி உதவியை வழங்கவில்லை என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் இடைநிறுத்தப்படவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர், குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரும் செயற்பட்டு வருகிறார் எனவும் கூறினார்.

அதன்படி குறுகிய காலத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் தீவிரவாதிகளின் கொள்கைகளைப் பரப்பவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தர்.

# 16 வாரங்களுக்குப் பின்னர் 2 ஆவது டோஸை வழங்கல்

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து மேலும் ஒரு தொகுதி அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்காக இலங்கை தொடர்ந்து காத்திருப்பதால், இரண்டாவது டோஸை மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையிலான கொரோனா வைரஸ் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட செயலணியில் விவாதித்ததாக அறிய முடிகின்றது.

12 வாரங்களுக்கு மாறாக 16 வாரங்களுக்குப் பின்னர் இரண்டாவது தடுப்பூசியை வழங்குவது தொடர்பாக சுகாதார அமைச்சு ஆய்வு செய்து இறுதி முடிவை எடுக்க உள்ளது.

கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை ஜனவரி முதல் இலங்கை 9 லட்சம் பேருக்கு செலுத்தியுள்ளது. இருப்பினும் சீரம் நிறுவனம் தடுப்பூசியின் ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

சீரம் நிறுவனம் தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்தியுள்ளதால், முதல் டோஸ் பெற்ற அனைவருக்கும் இரண்டாவது டோஸை வழங்க முடியாது என்ற கவலைகள் எழுந்துள்ளன.

இருப்பினும் ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்க முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# இறந்து இரு மணி நேரத்தின் பின்னர் பிரேத அறையில் கண் விழித்த நபர்!

## நீர்கொழும்பு வைத்தியசாலையில் சம்பவம்



நீர்கொழும்பு வைத்தியசாலையில் இறந்தாக உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் 2 மணித்தியாலங்களின் பின் கண் விழித்தார்.

வைத்தியர்களால் இறந்ததாக உறுதிப்படுத்தப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் மீண்டும் உயிர் பெற்ற சம்பவம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

குறித்த நபர் தற்போது அதே வைத்தியசாலையில் சாதாரண விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நீர்கொழும்பு துங்கல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த எலேக்சாண்டர் சில்வா என்ற 45 வயதான ஆண் கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனது குருதிச் சுற்றோட்டத்தில் சீனியின் அளவு குறைவடைந்தமையாலேயே குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எலேக்சாண்டரின் மனைவியால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் அவருக்கு அங்கு வைத்தியர்கள் சிகிச்சையளித்துள்ளனர்.

அவ்வாறு சிகிசையளிக்கப்பட்டு வந்தவர் மரணமானார் என வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையின் பிரேத அறையில் அவரை வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அப்போது எலேக்சாண்டரின் மனைவி கதறி அழுதுள்ளார்.

இவ்வாறு அவர் அழும் போது எலேக்சாண்டரின் முகம் அசைந்துள்ளது.

இதனை அவதானித்த எலேக்சாண்டரின் மனைவி தனது கணவன் மரணிக்கவில்லை என்பதை கூறியுள்ளார்.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வைத்தியசாலை ஊழியர்கள் எலேக்சாண்டரை 4 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்ட நபர் சுமார் 2 மணித்தியாலங்களாக பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தார்.

இது குறித்து எலேக்சாண்டரின் மனைவி கூறுகையில், நான் அவரை சென்று பிரேத அறையில் பார்க்கும் போது அவர் மேல் துணியொன்று போர்த்தப்பட்டு இருந்தது. அப்போது நான் அழ ஆரம்பித்தேன். அப்போது அவரின் வாய் அசைந்தது. அப்போது அவர் கிடத்தப்பட்டிருந்த டிரோயிலில் இருந்து கீழே இறங்கி கட்டிலை நோக்கிச் சென்றார். இப்போது அவர் நலமாக இருக்கின்றார். முன்னர் அவர் இறந்தாகவே கூறப்பட்டது. – என்றார்.

எவ்வாறாயினும் குருதியில் சீனியின் அளவு குறைந்தமையால் அவர் மயக்கத்தில் இருந்தார் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் எலேக்சாண்டரை பரிசோதித்த வைத்தியர்கள் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு வங்கத்தில் இன்று 4 ஆம் கட்ட வாக்களிப்பு!

மேற்கு வங்க மாநிலத்தில் மொத்தம் 8 கட்டங்களாக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. ஏற்கனவே, கடந்த மார்ச் 27ஆம் திகதி, முதல் கட்டமாக 30 தொகுதிகளில் வாக்குப்பதிவு



நடைபெற்றது. தொடர்ந்து, ஏப்ரல் முதலாம் திகதி 30 தொகுதிகளுக்கும் 6 ஆம் திகதியில் 31 தொகுதிகளுக்கும் 2 ஆவது, 3 ஆவது கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, இன்று 4 ஆவது கட்டமாக 44 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

கூச் பெகார், அலிபுர்தூர் மாவட்டம் மற்றும் தெற்கு 24 பர்கனாஸ் உட்பட்ட இடங்களில் இன்றைய வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 15,940 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 373 வேட்பாளர்கள் களத்தில் இருக்கின்றனர். 3 ஆம் கட்டத் தேர்தலின்போது பல இடங்களில் மோதல் வெடித்திருந்ததனால். இன்றைய வாக்குப்பதிவுக்கான பாதுகாப்புக்கு துணை இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

மத்திய அமைச்சர் பபூல் சுப்ரியோ, மாநில அமைச்சர்கள் பார்தா சட்டர்ஜி, அருப் பிஸ்வாஸ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் போட்டியிடும் தொகுதிகளில் இன்றைய தினம் வாக்குப்பதிவு நடைபெற்றதானால் ஊடகங்களின் கவனம் அங்கே குவிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரை திருவிழாவுக்கு பக்தர்கள் வரத் தடை

கொரோனாத் தொற்று அச்சத்தினால் மதுரையில் புகழ் பெற்ற சித்திரைத் திருவிழா கடந்தாண்டு பக்தர்கள் மத்தியில் நடைபெறவில்லை. இந்தாண்டுக்கான சித்திரைத் திருவிழாவும்ஏப்ரல்15ஆம்திகதிகொடியேற்றத்துடன் தொடங்கி30ஆம்திகதிவரைநடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான அழைப்பிதழும் அச்சடிக்கப்பட்ட நிலையில், தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்திருப்பதால், இந்தாண்டும்சித்திரை திருவிழாவிற்கு பக்தர்கள் வருவதற்குத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து மதுரை ஆட்சியர் அன்பழகன் கூறுகையில்,“ மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழா, கடந்த ஆண்டைப் போலவே கோயிலுக்குஉள்ளேயே நடைபெறும். திருவிழாநிகழ்வுகளில்பக்தர்களுக்கு அனுமதியில்லை. இணையத்தளம் மூலம் திருவிழாவைப் பார்ப்பதற்கு கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது”என்று தெரிவித்துள்ளார்.

# மேற்கு வங்க வாக்களிப்பில் துப்பாக்கிச்சூடு வாக்குப்பதிவை நிறுத்த தேர்தல் ஆணையம் உத்தரவு



மேற்கு வங்கத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் பலியானதையடுத்து சிதால் குர்ச்சி தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி 125 இல் வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது. சிறப்பு தேர்தல் பார்வையாளர்கள் அளித்த இடைக்கால அறிக்கையின் படி தேர்தல் ஆணையம் இந்த முடிவை வெளியிட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் 4 ஆவது கட்ட வாக்குப்பதிவு 44 தொகுதிகளில் இன்று நடைபெற்றது. குறித்த சிதால் குர்ச்சிதொகுதிவாக்குச்சாவடிக்கருகில் வைத்து பா.ஜ.கவை சேர்ந்த மூத்த நிர்வாகி சட்டர்ஜியின் கார் மீது உள்ளூர் பொதுமக்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து அங்கு கலவரம் வெடித்தது. இதைத் தொடர்ந்து வெடிகுண்டு வீச்சும் அப்பகுதியில் நடைபெற்றது. அப்போது சிலர் சி.ஆர்.பி.எப். வீரர்களின் துப்பாக்கிகளைப் பறிக்க முயற்சி செய்ததாக சொல்லப்படுகிறது. அதனைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக அறிக்கை வழங்கும்படி மாநில அரசிடம் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமதிக்கு தடை

## மோடிக்கு ராகுல் கடிதம்



கொரோனா த் தடுப்பூசி பற்றாக்குறை தொடர்பாக பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

‘கொரோனா தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். தடுப்பூசி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும்.தேவைப்படும்அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். கொரோனாத் தடுப்பூசி கொள்முதலுக்கு தற்போது ஒதுக்கியுள்ள 35ஆயிரம்கோடியை இரட்டிப்பாக்க வேண்டும். நமது நாட்டில் தடுப்பூசிப் பற்றாக்குறை நிலவும் நேரத்தில் 6 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசிப் பற்றாக்குறை குறித்து அனைத்து மாநில அரசுகளுமே வெளிப்படையாக கூறும் நிலையில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை மட்டுமே குறி வைத்து மத்திய சுகாதார அமைச்சர் மீது குற்றஞ்சாட்டுகிறார். தங்கள் அரசின் மற்ற முடிவுகளை போல்,அரசின் செல்வாக்கைக் காட்டுவதற்காகவே கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமதி செய்யப்படுகிறதா? அல்லது சொந்தக் குடிமக்களின் செலவில் விளம்பரம் பெறுவதற்கான முயற்சியா? நன்கு திட்டமிட்ட, விரைவான, அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் நடவடிக்கையை காங்கிரஸ் ஆதரிக்கிறது’ என்று தனது கடிதத்தில் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

# உத்தரப்பிரதேசத்தில் கொரோனா ஊசிக்குப் பதிலாக ரேபிஸ் தடுப்பூசி

உத்தரப்பிரதேசத்தின் ஷாம்லி மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி போடச் சென்ற பெண்களுக்கு ரேபிஸ் தடுப்பூசிகள் வழங்கப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அரசு மருத்துவமனையில் நடந்துள்ளது. பாதிக்கப்பட்ட மூன்று பேரும் சரோஜ் (70), அனார்கலி (72), சத்தியாவதி (60) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஷாம்லியில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளச் சென்ற அங்கு அவர்கள் மூவருக்கும் கொரோனாத் தடுப்பூசிக்குப் பதிலாக வெறிநாய்க் கடிக்கான ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஜஸ்ஜித் கவுர் கூறுகையில், சுகாதார மையத்தின் முதல் தளத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இவர்கள் மூவரும் அங்கு செல்லாமல் மற்றொரு பிரிவுக்குச் சென்றுள்ளனர். அங்கிருந்த மருந்தாளர் அவசர வேலையாக வெளியே புறப்பட்டுள்ளார். அவர்களுக்கு தடுப்பூசி செலுத்துமாறு மற்றொரு நபரிடம் கூறியுள்ளார். அந்த நபர் தவறுதலாக, ரேபிஸ் தடுப்பூசி செலுத்தியுள்ளார்.

தவறுக்கு காரணமானவரை இடைநிறுத்தம் செய்யும்படி, தலைமை சுகாதார அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் கொரோனா பரவல் அதிகரிப்பு இன்று முதல் இறுக்கமான கட்டுப்பாடுகள்!

புதுச்சேரியில் கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வரும்நிலையில்பல்வேறு கட்டுப்பாடுகள் இன்று முதல் அமுலுக்கு வருகின்றன.

புதுச்சேரி கதிர்காமம் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் வைத்து ஊடகங்களைச் சந்தித்த ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், ‘பக்கத்து மாநிலங்களில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளால் புதுவையில் மிகத் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நூறு சதவீதம் கட்டுப்பாடு என்ற வகையில் 100 இடங்களில் நாளை முதல் 14 ஆம் திகதி வரை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அதேபோல் 100 இடங்களில்கொரோனாத்தடுப்பூசியும்செலுத்தப்படவுள்ளது’ என்று குறிப்பிட்டார்.



‘புதுவையில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்படுகிறது. முகக்கவசம் இல்லாமல் யாரும் நடமாடக் கூடாது. வாகனங்களில் செல்லும்போது கூட கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். கடைகள், அங்காடிகளில் முகக்கவசம் இல்லாமல் யாரையும் அனுமதிக்கக் கூடாது. கட்டாயம் சனிடைசர் வழங்க வேண்டும். சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். திரையரங்குகளில் 50 சதவீத இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். பொது விழாக்கள், இலக்கிய விழாக்கள், சமய விழாக்கள், குடும்ப விழாக்கள் என எந்த விழாவாக இருந்தாலும் ஒரு இருக்கை இடைவெளி விட்டுதான் அமர வேண்டும்’ போன்ற கட்டுப்பாடுகளும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

‘அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தடுப்பூசி போடப்படும். எங்கெல்லாம் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதோ, அங்கு பரிசோதனை தீவிரப்படுத்தப்படும். பொதுமக்கள் அச்சமின்றி வந்து பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். புதுவையில்தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக இன்றிலிருந்து இரவு 12 மணி மணி முதல் அதிகாலை 5 மணி வரை தீவிர கொரோனாக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும். பஸ்களில் சமூக இடைவெளியுடன் இருக்கையில் அமரலாம். ஆனால் நின்றபடி பயணம் செய்ய அனுமதி கிடையாது. ஓட்டோக்களில் 2 பேர் தான் செல்ல வேண்டும். இந்த நடைமுறைகளை சரியாகக் கடைப்பிடித்தால் கொரோனாவை நாம் கட்டுப்படுத்தி விடலாம்’ என்றும் ஆளுநர் தமிழிசை அந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

# வாக்கு இயந்திரச் சர்ச்சை வேளச்சேரியில் மறு வாக்களிப்பு?

தமிழகத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் பொதுவாக அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. வேளச்சேரி தொகுதியில் மட்டும் ஒரு வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு இயந்திரத்தை இரண்டு சக்கர வாகனத்தில் எடுத்துச் சென்றதாக புகார் எழுந்தது.

இந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவின்போது இயந்திரம் பழுதானால் பயன்படுத்துவதற்காக கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. இதில், பயன்பாட்டில் இருந்த வாக்களிப்பை உறுதிப்படுத்தும் விவிபேட் இயந்திரம் ஒன்று பழுதானதால் அங்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இதன் பின்னர் பழுதடைந்த இயந்திரம் இரு சக்கர வாகனமொன்றில் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது தேர்தல் நடைமுறைக்கு எதிரான நடவடிக்கை என்று பல தரப்பாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

‘மண்டல குழு அதிகாரிகள், இராணுவப் பாதுகாப்புடன்தான் வேறு மையத்துக்கு இயந்திரங்களை எடுத்துச் செல்ல வேண்டும். இது போன்று மின்னணு இயந்திரங்களை இரண்டு சக்கர வாகனத்தில் கொண்டு செல்ல யாருக்கும் அனுமதி இல்லை. எனவே, மீள் வாக்குப்பதிவை நடத்துங்கள்’ என்ற கோரிக்கை எழுந்துள்ளது. வேளச்சேரியில் நடந்த சம்பவம் குறித்து அந்த வாக்குப்பதிவு மையத்தில் பணியாற்றிய அதிகாரிகள் விவரமாக அறிக்கை கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட தேர்தல் அதிகாரியும் தேர்தல் பார்வையாளரும் அறிக்கை கொடுத்துள்ளனர். இவை இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, தேர்தல் ஆணையம் தான் மறுவாக்குப்பதிவு நடத்த வேண்டுமா, இல்லையா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்க வேண்டும். இதில் இரண்டு சக்கர வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குகள் எதுவும் பதிவாகவில்லை. விவிபேட் இயந்திரம் மட்டும் 50 நிமிடம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் 15 வாக்குகளும் பதிவாகி உள்ளன. பழுதானதால் கூட, இயந்திரங்களை எடுத்துக் கொண்டு வெளியே சென்றிருக்கக்கூடாது. கண்டிப்பாக, இது பெரிய அளவிலான தவறான நடைமுறை தான்.

இது தொடர்பில் மூன்று கட்ட விசாரணை நடைபெறும். மறுவாக்குப்பதிவு நடத்துவது பற்றி தேர்தல் ஆணையம்தான் முடிவு எடுக்கும். தமிழகம் முழுவதும் பதிவான வாக்குகள் அனைத்தும் தொகுதி வாரியாக 75 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.மே2ஆம்திகதிகாலை8மணிக்கு அந்த மையங்களில் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து ராணியின் கணவர் இளவரசர் பிலிப் காலமானார்

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப். 99 வயதான இவர் உடல் நலக்குறைவால் நேற்று காலமானார்.

வின்ஸ்டர் அரண்மனையில் உயிர் பிரிந்ததாக எலிசபெத் ராணி தெரிவித்துள்ளார்.

மறைந்த இளவரசர் பிலிப், 1921 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டில் பிறந்தார். 1947 ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தை திருமணம் செய்து கொண்டார்.

சுமார் 65 வருடங்கள் ராணிக்கு உதவியாக இருந்த பிலிப், கடந்த 2017 ஆம் ஆண்டு தன்னை பொது வாழ்க்கையில் இருந்து விடுவித்துக்கொண்டார். இவர் துடிப்பாக இருந்த காலத்தில் ராணியின் ஆட்சிக்கு மிகவும் உதவியாக இருந்தார். இங்கிலாந்து அரச குடும்பத்தில் நீண்ட வருடங்கள் இளவரசராக இருந்தவர்.

பிலிப், கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்கனவே இருந்த இருதய நோய் மற்றும் நோய்த்தொற்றுக்காக சிகிச்சை பெற்று, வீடு திரும்பினார். இந்த நிலையில் நேற்று காலமாகியுள்ளார்.




## அமெரிக்காவில் துப்பாக்கிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஜோ பைடன் உத்தரவு



அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக துப்பாக்கி கலாசாரம் பெருகி வருகிறது. பொலிஸாரை குறிவைத்தும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் தொடர் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

பெருகிவரும் துப்பாக்கி கலாசாரத்துக்கு எதிராக எதிர்ப்புக் குரல்கள் வலுத்து வருகின்றன. துப்பாக்கி விநியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் நீண்ட காலமாக அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனாலும் அரசு தரப்பில் இதுவரை எந்த ஆக்கப் பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாததால் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.

அதிலும் குறிப்பாக கடந்த சில மாதங்களாக அமெரிக்காவில் அடுத்தடுத்து அரங்கேறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அந்த நாட்டை அதிர வைத்து வருகின்றன.

கடந்த புதன்கிழமை தெற்கு கரோலினா மாகாணத்தில் முன்னாள் கால்பந்தாட்ட வீரரான பிலிப் ஆடம்ஸ் என்பவர் ஒரு டாக்டர், அவரது மனைவி மற்றும் பேரக் குழந்தைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார். பின்னர் அவரும் பொலிஸுக்கு பயந்து துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் இருந்த படி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் தெற்கு கரோலினா மாகாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தனது இரங்கலை தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அவர் துப்பாக்கிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பது தொடர்பாக பல்வேறு நிர்வாக உத்தரவுகளைப் பிறப்பித்தார். இது குறித்து அவர் பேசியதாவது:-

அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறை ஒரு தொற்று நோயாக பரவி வருகிறது. இது சர்வதேச அளவில் அமெரிக்காவை தர்மசங்கடத்துக்கு ஆளாக்கி வருகிறது. நாட்டில் தினமும் சராசரியாக 106 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இந்த தொற்று நோய் நிறுத்தப்பட வேண்டும். எனவேதான் துப்பாக்கிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கும் விதமாக பல நிர்வாக உத்தரவுகளை பிறப்பித்துள்ளேன்.

அதன்படி 'பேய் துப்பாக்கிகள்' என்று அழைக்கப்படும் வீட்டிலேயே தயாரிக்கப்படும் துப்பாக்கிகளின் எண்ணிக்கையை குறைக்க 30 நாள்களுக்குள் ஒரு விதியை உருவாக்க நீதித்துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதேபோல் கைத்துப்பாக்கிகள் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க புதிய விதியை உருவாக்க நீதி த்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சிவப்புக் கொடி சட்டத்தை உருவாக்க நீதித்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது மாகாணங்கள் தங்கள் சொந்த சட்டத்தை உருவாக்க வழிவகை செய்யும். இந்த சட்டம் சமூகத்துக்கு ஆபத்து என்று கருதப்படும் மக்களிடம் இருந்து துப்பாக்கிகளை அகற்ற நீதிமன்றத்துக்கும், சட்ட அமுலாக்கத்துக்கும் அங்கீகாரம் அளிக்கும்.

துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்த நடவடிக்கைகள் குறைவு என்பதை அறிவேன். எனினும் இது ஆரம்பம் மட்டுமே. துப்பாக்கி கட்டுப்பாடுகளுக்கான எனது நிர்வாகத்தின் நடவடிக்கைகள் தொடரும். இவ்வாறு ஜோ பைடன் கூறினார்.

## கொரோனா விதிகளை மீறியனார் நோர்வே பிரதமருக்கு அபராதம்



நோர்வே நாட்டு பிரதமருக்கு கொரோனா கட்டுப்பாடுகளை மீறியதற்கான 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டு பிரதமர் எர்னா சொல்பேர்க் (Erna Solberg) கடந்த பெப்ரவரி மாதம் தனது 60 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். கொரோனா பாதிப்பு காரணமாக, 10 இற்கும் மேற்பட்டோர் விழாக்களில் பங்கேற்க அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டிருந்த போதும், கட்டுப்பாடுகளை மீறி தனது குடும்ப உறுப்பினர்கள் 13 இற்கும் மேற்பட்டோருடன் பிறந்த நாளை கொண்டாடியதாக அவர் மீது புகார் எழுந்தது.

இதனையடுத்து, கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறியதாக பிரதமர் எர்னா சொல்பேர்க் - இற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## 3,000 ஆண்டுக்கு முன்பு மணலில் புதைந்த தங்க நகரம் எகிப்து நாட்டில் கண்டுபிடிப்பு



எகிப்தில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மணலில் புதைந்து போன தங்க நகரம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லக்ஸார் என்ற இடத்தில் பாலைவனத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆய்வு நடத்தினர். அப்போது சிறிய அளவிலான சுவர் தென்பட்டதைத் தொடர்ந்து அதனை ஆய்வு செய்தபோது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அழிந்து போன தங்க நகரம் என்பது தெரியவந்தது.

எகிப்து வரலாற்றிலேயே மிக முக்கிய கண்டுபிடிப்பாகக் கருதப்படும் டுட்டகாமன் கல்லறையைத் தொடர்ந்து தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தங்க நகரம் மிக முக்கியமானது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மணலில் புதைந்திருந்த இந்த நகரத்தில் தங்க நகைகள், வண்ணமயமான மட்பாண்ட பொருள்கள், தாயத்துக்குள், அரச முத்திரைகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புதிய அரசியலமைப்பில்
சைவ சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்க
மதமாற்றத் தடையை உள்ளடக்குக
மாடுகளை வெட்டத் தடையை உள்ளடக்குக
සෛවාගමට ප්‍රමුඛතාවක් දෙන්න.
ආගම් වෙනස් කිරීම තහනම් කරන්න.
ගව ඝාතයට එරෙහිව තහනම් නියෝගයක් පනවන්න.



தவத்திரு விபுலானந்த அடிகளார்
129ஆவது பிறந்த நாள், பங்குனி பூரட்டாதி (10.04.2021)
இலங்கையின் 12 மாவட்டங்களில் 16 திருக்கோயில்களில்
தவமிருக்கிறோம் - உண்ணா நோன்பு நோற்கிறோம் - வழிபடுகிறோம்
மூன்று கோரிக்கைகளை முன் வைக்கிறோம். ஆதரிப்பீர்.
மறவன்புலவு க. சச்சிதானந்தன் +94 772 754 864

ST.ANTONY'S COMPUTER
ASUS DELL hp



மேசைக்கணினிகள்
(Desktop pc)
60,000 ரூபா முதல்
2 YEARS WARRANTY
189, K.K.S Road, Jaffna Town.
021 222 4865
075 069 8608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99 வயது வரை இளவரசர்தான்

## பிலிப் மன்னர் என்று அழைக்கப்படாதமை ஏன்?



இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் மனம் கவர்ந்த காதல் கணவராக இளவரசர் பிலிப் திகழ்ந்தபோதிலும், கடைசி வரை 'மன்னர்' என அழைக்கப்படவே இல்லை. அதற்கான காரணம் என்ன..? வாருங்கள் தெரிந்து கொள்வோம்...

இங்கிலாந்து ராணி எலிசபெத், கடந்த 1942 ஆம் ஆண்டில் 21 வயதாக இருந்த போது இளவரசர் பிலிப்பை காதலித்து திருமணம் செய்து கொண்டார். ராணிக்கு, இளவரசர் பிலிப்பை 13 வயதிலிருந்தே தெரியும். இருவருக்குமிடையேயான இனம் புரியாத நட்பு, திருமணத்தில் முடிந்தது.

காதலர்களாக இருந்த போது இளவரசர் பிலிப்புக்கு ராணி எலிசபெத் காதல் சொட்ட சொட்ட கடிதங்கள் எழுதி இருந்தார். அதில் ஒரு கடிதம், சில ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 1.25 லட்சம் ரூபா வரைக்கும் ஏலம் விடப்பட்ட போது, உலகமே அதனை வியந்து பார்த்தது. அதில், இளவரசர் பிலிப்புடன் நடந்த சந்திப்புகள், கேளிக்கை விருந்துகளில் பங்கேற்றது மற்றும் சுவாரஸ்யமான உரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

அந்த அளவுக்கு இருவருக்கும் இடையே நெருக்கமான காதல் உறவு இருந்தது. அதே சமயம் 68 ஆண்டுகளுக்கு முன்பு, அரியணை

> அரச குடும்ப ரத்த உறவு உள்ள ஒரு ஆண், எந்த ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டாலும், அவரது மனைவி, கணவர் இள வரசராக இருக்கும்போது 'இளவரசி' என்றும், கணவர் 'மன்னர்' ஆகிவிட்டால், 'ராணி' என்றும் அழைக்கப்படுவார். இதன்படி, நாளை வில்லியம் 'மன்னர்' என அழைக்கப்படும் போது, அவரது மனைவி கேத்தரைனும் 'ராணி' என்றே அழைக்கப்படுவார்.



ஏறிய இளவரசி எலிசபெத் மகாராணியான நிலையில், அவரது கணவரான இளவரசர் பிலிப் மட்டும் கடைசி காலம் வரை 'இளவரசர் பிலிப்' என்றும், எடின்பர்க் கோமகன் என்றும் அழைக்கப்பட்டாரே தவிர, 'மன்னர்' என ஒரு போதும் அழைக்கப்படவில்லை.

வருங்காலத்தில் இளவரசர் வில்லியம் 'மன்னர்' ஆகலாம். அவரது மனைவி கேத்தரைனும் 'மகாராணி' என அழைக்கப்படலாம். அப்படி இருக்க பிலிப் மட்டும் ஏன் 'மன்னர்' என அழைக்கப்படவே இல்லை? என்பதற்கான விடையைச் சொல்கிறது இங்கிலாந்து நாடாளுமன்ற சட்ட விதிமுறைகள்.

இந்த சட்டத்தின்படி, இங்கிலாந்து அரச குடும்பத்தின் அடுத்த மன்னர் அல்லது ராணியாக யார் வரவேண்டும் என்பதை ரத்த உறவு தான் தீர்மானிக்குமே தவிர, பாலினம் அல்ல. அதாவது அரச குடும்பத்தினரின் வாழ்க்கைத் துணைவர்களைப் பொறுத்தவரை ஆணுக்கு ஒரு விதி, பெண்ணுக்கு ஒரு விதி என வெவ்வேறாக வகுக்கப்பட்டுள்ளது.

அரச குடும்ப ரத்த உறவு உள்ள ஒரு ஆண், எந்த ஒரு பெண்ணை திரு மணம் செய்து கொண்டாலும், அவரது மனைவி, கணவர் இளவரசராக இருக்கும்போது 'இளவரசி' என்றும், கணவர் 'மன்னர்' ஆகிவிட்டால், 'ராணி' என்றும் அழைக்கப்படுவார். இதன்படி, நாளை வில்லியம் 'மன்னர்' என அழைக்கப்படும் போது, அவரது மனைவி கேத்தரைனும் 'ராணி' என்றே அழைக்கப்படுவார்.

அதே சமயம், அரச குடும்ப ரத்த உறவு உள்ள ஒரு பெண், அரச குடும்பம் அல்லாத அல்லது அரச குடும்பத்தைத் துறந்த ஒரு வரை திருமணம் செய்து கொண்டால், அவரது கணவர், இளவரசர் என்றோ மன்னர் என்றோ அழைக்கப்படமாட்டார்.

அந்த அடிப்படையிலேயே பிலிப், எலிசபெத்தை 1947 ஆம் ஆண்டில் மணந்தபோது அவருக்கு 'இளவரசர்' என்ற பட்டப் பெயர் வழுங்கப்படவில்லை.

இருப்பினும் தனது அரச குடும்ப அதிகாரத்தைப் பயன்படுத்தி, 1957 ஆம் ஆண்டு, கணவர் பிலிப்புக்கு 'இளவரசர்' என்ற பட்






டத்தை வழுங்கினார் எலிசபெத். அதன் காரணமாகவே, கடைசி வரை 'மன்னர்' என அழைக்கப்படாமலேயே மறைந்தும் போனார் பிலிப்.

இத்தனைக்கும் இளவரசர் பிலிப், கிரேக்க மற்றும் டேனிஷ் அரச குடும்பத்தினருக்கு இளவரசனாகப் பிறந்தவர். ஆனால் எலிசபெத்தை திருமணம் செய்வதற்காக அரச குடும்பத்தைத் துறந்தார். அதற்கு பரிசாகவே, அவருக்கு 'எடின்பர்க் கோமகன்' என்ற பட்டத்தை ராணி எலிசபெத் வழுங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வை தடை செய்யக் கோரி கவனயீர்ப்பு போராட்டம்



மட்டக்களப்பு கோறளைப்பற்று கிண்ணையடி கிராமத்தில் அமைக்கப்படும் மீன் பண்ணை மற்றும் மணல் அகழ்வை தடை செய்யக் கோரி நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு கிண்ணையடி பிராதான வீதியில் இருந்து ஆரம்பமான போராட்டமானது ஊர்வலமாக வந்து பிரதேச செயலகத்தினை வந்தடைந்தது. ஊர்வலத்தில் வந்தோர் வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு பிரதான வீதி வழியாக வாழைச்சேனையை வந்தடைந்தனர்.

அங்கு கூடியவர்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நின்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மீன்வளர்ப்புத் திட்டத்தை ரத்துச் செய்,எமது மண் எமக்கு வேண்டும்.அள்ளாதே அள்ளாதே மணலை அள்ளாதே, என்ற கோஷங்களை எழுப்பினார்கள். பின்னர் பிரதேச செயலக வளவினுள் சென்று கோஷங்களை எழுப்பினர். உதவி பிரதேச செயலாளரிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை சமர்ப்பித்தனர்.

மகஜரை வாசித்து அறிந்து கொண்ட உதவி பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிரிந்தன் தங்களது கோரிக்கை தொடர்பான விடயத்தினை தமது மேலதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தங்களது போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். கிண்ணையடி கிராமத்தில் வில்லுக் குளம் ஊடாகவும் தனியார்காணிஊடாகவும்மீன்பண்ணைஅமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மீன் அமைக்கும் போர்வையில் தங்களது கிராமத்து மண் வளங்கள் எண்ணிக்கையில்லாமல் வெளி மாவட்டங்களுக்கு இரவோடு இரவாக கணரக வாகனங்களில் அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது என்றும் இதனை கருத்தில் கொண்டு மீன் பண்ணை அமைக்கும் திட்டத்தினை ரத்து செய்து தருமாறு பிரதேச மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## மட்டக்களப்பில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு, ஏப். 10

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட கொள்ளையர்களின் மோட்டர் சைக்கிளில் இருந்து கைக்குண்டு ஒன்றை நேற்றுமுன்தினம் மாலை மீட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை தனிமையில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங் கச் சங்கிலியை மோட்டர் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற கொள்ளையர்கள் அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து காவல் துறையினர் மேற்கொண்ட விசாரணையில் காத்தான்குடி பூநொச்சி முனை பகுதியைச் சேர்ந்த 20,19 வயதுடைய இருவரை கைது செய்ததுடன் அறுக்கப்பட்ட 2 பவுண் தங்கச் சங்கிலி ஒன்றையும் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டர் சைக்கிளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகவும் காவல் துறையினர் தெரிவித்தனர்.

## போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த குற்றச் சாட்டின்பேரில் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பொலிஸாரினால்நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் போதைப் பொருள் வியாபாரத்திற்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் முச்சக்கர வண்டியொன்றும் கைப்பற்றப் பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ஒரு தொகுதி போதை மருந்துகள் கைப் பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வுப்பிரிவினர் போதைப் பொருள் வியாபாரியைப் போல நடித்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விட்டு அறுபதாயிரம் ரூபா பணத்துடன் குறித்த வீட்டிற்குச் சென்ற வேளை போதை மருந்தினை கைமாறிய பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண்ணின் மூத்த சகோதரி போதைப் பொருள் குற்றச்சாட்டின் பேரில்ஏற்கனவேகைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச்சகோதர உறவான இருவரையும் திருமணம் செய்துள்ள பிரபல போதைப்பொருள் வியாபாரி தலைமறைவாகியுள்ளதாகவும் அவரைத் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஹெரோயின் பக்கற்றுக்களுடன் மதகு ஒன்றின் மீது அமர்ந்திருந்த மூன்று பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலீஸார் கூறினர்.

ஏறாவூர்ப் பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர்எச்.எம். ஷியாம்தலைமையிலான குழுவினர் ஏறாவூர்ப் பொலிஸ் பிரதேசத்தில் போதைத் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்மாந்துறை பஸ் டிப்போ விவகாரம் இளைஞர்கள் கையெழுத்து வேட்டை




சம்மாந்துறையில்அமைந்துள்ளஇலங்கை போக்குவரத்து சபைக்குச்சொந்தமான டிப்போ வேறு இடத்திற்கு மாற்றப்பட உள்ளதாகஅண்மையில் வெளியான தகவலையடுத்து அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த டிப்போவை அவ்விடத்திலேயே நிரந்தரமாக இருக்கச் செய்ய பல கட்ட நடவடிக்கைகள் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவை வெற்றியளிக்காமையால் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போவை அங்கையே நிரந்தரமாக வைக்குமாறுகோரிசம்மாந்துறைஇளைஞர்கள் கடந்த ஐந்து நாள்களாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர், பிராந்திய தலைவர்கள் எனப் பலரையும் விழித்து எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்திக் கொண்டு கோஷங்களை எழுப்பி தீர்வு கிடைக்கும் வரை போராட போவதாக அறிவித்திருந்த நிலையில் இன்று அந்த போராட்டத்திற்க்கு வலு சேர்க்கும் வகையில் சம்மாந்துறை மக்களிடம் கையெழுத்து பெறும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடுமையான உஷ்ணநிலை அம்பாறையில் இருந்தாலும் மக்கள் இந்த கையெழுத்து வேட்டையில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தனது ஆதரவை வழுங்கி வருகின்றனர்.

மக்களிடமிருந்து பெறப்படும் இந்த கையெழுத்துப்பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர், அம்பாறை அரசாங்க அதிபர் போன்றோருக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாணத்துக்கு புதிய சுகாதார சேவை பணிப்பாளர்



கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீத் உத்தியோகபூர்வமாக நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலைநீதிமன்றவீதியில்அமைந்துள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சம்மாந்துறையை பிறப்பிடமாக கொண்ட இவர் வெலிசற சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் அத்தியட்சகராகவும், நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் ராகம போதனா வைத்தியசாலை ஆகியவற்றில்வைத்திய அத்தியட்சகராகவும், சுகாதார அமைச்சின்கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகளின் ஆய்வுகூடங்களுக்கான அத்தியட்சகராகவும் கடமையாற்றி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையாலதாகரன், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந், சமூக வைத்திய நிபுணர் டாக்டர் அருள்குமரன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மூடப்பட்டிருந்த கல்விக்கூடம் மீண்டும் சேவைக்கு திரும்பியது





புதிய கட்டமைப்புடன் உருவாக்கப்பட்டு மிக நீண்ட நாள்களாக இயங்காமல் இருந்த அக்கரைப்பற்று பிரதேசசபைக்குட்பட்ட இசங்கணிச்சீமை தாறுல் பிஹாம் பாலர் பாடசாலையை அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ரீ எம் ஐய்யுப் அவர்களின் வழி நடாத்தலின் கீழ் இந்த வருடம் முதல் சிறப்பாக தொடர்ந்தும் நடத்தி செல்லும் நோக்கில் அப்பாலர் பாடசாலையின் வித்தியாரம்ப நிகழ்வு நடைபெற்று உத்தியோகப்பூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் இசங்கணிச்சீமை பிரதேசத்திலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அத்துடன் அந்த மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த ஆசிரியை திருமதி அஸ்மியாவும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பட்டதாரி பயிலுநர்களாக அண்மையில் இப்பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்களுக்கான வரவேற்பும் இந்நிகழ்வில் இடம் பெற்றது.

## பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக கடந்த ஒரு வருட காலமாக பட்டதாரிப் பயிலுநர்களாக பயிற்சிகளை மேற்கொண்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், நியமனதாரிகளுக்கான நியமனங்களையும் வழங்கிவைத்தார்.

பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 201 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் இவர்களை மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளின் ஆளணி தேவையின் நிமித்தம் நியமனங்கள் வழங்கப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த கடமை நிலையங்களில் கடமைப்பொறுப்பினை ஏற்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# ஏ.பி.டி. வில்லியர்ஸ் அதிரடி; இறுதிப் பந்தில் திரில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி..!!

2021ஆம் ஆண்டுக்கான 14ஆவது ஐ.பி.எல் தொடர் நேற்றையதினம் சென்னை சிதம்பரம் விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது. முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும், ரோஜல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியில் பெங்களூர் அணிக்காக முதன் முறையாகக் களமிறங்கிய ஹர்சல் படேலின் அற்புதமான 5 விக்கெட்டுக்களும், ஏ.பி.டிவில்லியர்ஸின் வழக்கமான அதிரடி ஆட்டமும் கைகொடுக்க மும்பை இந்தியன்ஸ் அணியை 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரின் முதலாவது போட்டியில் இறுதிப் பந்தில் திரில் வெற்றி பெற்றது ரோயல் சலஞ்சர்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய ரோயல் சலஞ்சேர்ஸ் அணி முதலில் பந்து வீசுவதற்குத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்ப மற்றும் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சற்று நம்பிக்கையளித்தாலும் மத்தியவரிசை மற்றும் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக கிறிஸ் லின் 49 ஓட்டங்களையும் சூரியகுமார் யாதவ் 31 ஓட்டங்களையும் இஷான் கிஷன் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஹர்சல் பட்டேல் 05 இலக்குகளையும் சிராஜ் மற்றும் வாசிங்டன் சுந்தர் ஆகியோர் தலா ஒரு இலக்கி னையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பெங்களூர் அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சுந்தர் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந்து களமிறங்கிய பட்டிதார் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அணித்தலைவர் கோலி நிதானமாகத் துடுப்பெடுத்தாட, கோலியுடன் இணைந்த அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட மக்ஸ்வெல் அதிரடி ஆட்டத்தினை வெளிக்காட்ட, அணி தடுமாற்றத்தில் இருந்து வெளியே வந்தது.

எனினும் கோலி 33 ஓட்டங்களுடனும், மக்ஸ்வெல் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க மீண்டும் அணி தடுமாற்றம் கண்டது. பின்வரிசை வீரர்களும் தொடர்ந்து நிதானமற்ற ஆட்டத்தை வெளிக்காட்ட மறுமுனையில் தனித்து நின்று அதிரடி காட்டிய ஏ.பி.டி. வில்லியர்ஸ் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி இறுதிப் பந்தில் வெற்றி பெற்றது. மும்பை அணிக்கெதிராக 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்ற ஹர்ல் பட்டேல் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## தென்னாபிரிக்கா – பாகிஸ்தான் இருபதுக்கு இருபது தொடர் ஆரம்பம்



தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகள் மோதும் 4 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதலாவது போட்டி ஜோகன்னஸ்பேர்க்கில் இன்று நடைபெறுகிறது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஒரு நாள் சர்வதேசத் தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருந்த பவுமா தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதால் இருபதுக்கு இருபது தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக ஹென்ரிச் கிளாசென் அணியை வழிநடத்துகிறார்.

ஏற்கனவே ஐ.பி.எல். விளையாடச் சென்றிருக்கும் குயின்டன் டி கொக், ரபடா, டேவிட் மில்லர் போன்ற முன்னணி வீரர்கள் இல்லாமல் தவிக்கும் தென்னாபிரிக்க அணிக்கு, மேலும் சில வீரர்கள் காயத்தில் சிக்கியிருப்பது பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது. இதனால் இந்தத் தொடரிலும் பாகிஸ்தானின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது.


## இத்தாலி சிரி ஏ கால்பந்தாட்டத் தொடர் மூன்றாம் இடத்திற்கு முன்னேறியது யுவன்டஸ்

இத்தாலி நாட்டில் நடைபெற்று வரும் சிரி ஏ (Serie A) கால்பந்துத் தொடரில் புள்ளிப் பட்டியலில் நான்காம் இடத்தில் இருக்கும் யுவன்டஸ், ஐந்தாம் இடத்தில் இருக்கும் நாபொலி அணிகள் மோதின.

இவ்விரு அணிகள் மோதிய முதல் ஆட்டத்தை நாபொலி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மூன்றாம் இடம் கிடைக்கும் என்பதனால் இரு அணிகளும் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் களமிறங்கின.

ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் கியேஸ்ஸா கொடுத்த பந்தை றொனால்டோ கோலாக மாற்றி அணியை முன்னிலை பெறச் செய்தார். நாபொலி அணியின் தடுப்பு ஆட்டத்தை மீறி யுவன்டஸ் அணி தொடர்ச்சியாக வாய்ப்புகளை ஏற்படுத்தி வந்தாலும் அதற்கு மேல் முதல் பாதியில் கோலடிக்க முடியவில்லை.

இரண்டாம் பாதியில் நாபொலி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த, யுவன்டஸ் அணியோ பலமான தடுப்பு



ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பல நாள் கழித்து ஆட்டத்தில் களம் இறங்கிய யுவன்டஸ் அணியின் டிபாலா களமிறங்கிய நான்காவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நாபொலி அணிக்கு பெனால்டி உதையொன்று கிடைக்க அதை அணியின் தலைவர் இன்சைன் கோலாக மாற்றினார். இறுதியில் யுவன்டஸ் அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் யுவன்டஸ் அணி 59 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது

## ஆஸ்திரேலிய வீரரை வாங்கியது சென்னை!



ஐ.பி.எல். தொடரில் இடம்பெற்றுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான ஜேசன் பெஹென்டோர்ஃப்பை தங்கள் அணிக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

தொடரிலிருந்து வேகப்பந்து வீச்சாளரான ஜோஸ் ஹசல்வுட் விலகியதையடுத்தே இவரை சென்னை அணி தேர்வு செய்துள்ளது.

30 வயது இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஜேசன் பெஹென்டோர்ஃப், ஏழு ரி - 20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். கடந்த 2019 ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம்பிடித்திருந்த பெஹென்டோர்ஃப், அந்த அணிக்காக 5 போட்டிகளில் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாடுகளுக்கு உடனடி தீர்வு வழங்குக! கோரிக்கையுடன் மின்சார சபை ஊழியர் போராட்டம்




கொழும்பு, ஏப்ரல் 10

சம்பள முரண்பாடுகள் மற்றும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட வேண்டிய 25 சதவீத சம்பள உயர்வு ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, அரசாங்கத்தை வலியுறுத்தி இலங்கை மின்சார சபை ஊழியர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டம், மின்சார சபை ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டோர், சம்பள விவகாரம் தொடர்பாக எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

இதேவேளை கடுமையான பொருளாதார துயரங்கள் இருந்தபோதிலும், கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி கூடிய இயக்குநர்கள் குழு, தொழிலாளர்கள் கோரிய சம்பள உயர்வுக்கு பரிந்துரை செய்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதும் சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில்சம்பளமுரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படும் வரை போராட்டங்கள் தொடரும் என மின்சார சபை ஊழியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புற்றுநோய் மூலக்கூறு தேங்காய் எண்ணெய் விவகாரம்: விசாரணைக்கு சி.ஐ.டியின் 10 பேர் கொண்ட தனிப்படை

இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயில் புற்றுநோய் காரணியான 'எப்லொடொக்ஷின்' அடங்கியுள்ளமை தொடர்பிலான சிறப்பு விசாரணைகளுக்கு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புள டி லிவேரா, வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக இந்தத் தனிப் படை அமைக்கப்பட்டுள்ளது.

சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த டி சொய்ஸாவால் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழான இந்தத் தனிப்படை சிறப்புக் குழுவின் விசாரணை நடவடிக்கைகளில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட 9 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயில் புற்று நோய் காரணிகள் கலந்துள்ளன என பரவலாகக் கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வரும் நிலையில், சில பரிசோதனைகளிலும் அவை உறுதிசெய்யப்பட்டுள்ளன. அத்துடன் சி.ஐ.டிக்கும் சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இவ்வாறான நிலையிலேயே, பிரச்சினையின் தீவிரத் தன்மையை அவதானித்து, சட்ட மா அதிபர், தொடர்பான விவகாரம் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை முன்னெடுக்க நேற்று வெள்ளிக்கிழமை சி.ஐ.டிக்கு ஆலோசனை வழங்கியதாக சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன குறிப்பிட்டார்.

## தியவன்ன ஓயாவின் நிலைமை தொடர்பாக மீண்டும் சபையில் கேள்வி எழுப்பிய சஜித்

தியவன்ன ஓயா மாசடைந்துள்ளமை தொடர்பாக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றம் கூடியது.

குறித்த நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கடந்த மார்ச் 24 ஆம் திகதி, புதன்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், தியவன்ன ஓயா மாசடைந்துள்ளமை மற்றும் நீரின் நிறம் மாற்றம் தொடர்பாக சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

அந்தப் பகுதி சுற்றாடல் மாசடைந்துள்ளமை தொடர்பாக தேடிப்பார்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தேன்.

இதன்போது அரசாங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூறினார்கள். நான், மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதற் காகவே இவ்வாறு கருத்து வெளியிடுகின்றேன் என்று. ஆனால் இன்னும் குறித்த தியவன்ன ஓயா சுற்றாடல் மாசடைந்தவாறே காணப்படுகின்றது.

மேலும் நாடாளுமன்றத்துக்கு முன்னால் இருக்கும் நீர்த்தடாகம் தூய்மைப் படுத்தப்படுகின்றமையால் அதன் நீர் தியவன்னா ஓயாவுக்கு அனுப்பப்பட்டது. ஆகையால் நீரின் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் எனக் குறிப்பிட்டார்கள்.

அதனை சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சபாநாயகர் கடந்த நாடாளுமன்ற அமர்வில் கூறியிருந்தார். ஆனால் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. - எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு சஜித் கேள்வி எழுப்ப ஆரம்பித்ததும் உடனடியாக எழும்பிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, சஜித், சபாநாயகர் அறிவிப்பு வழங்குவதற்கு முன்னரே உரை நிகழ்த்தியமை சம்பிரதாயத்துக்கு முரணானது என குற்றம் சுமத்தினார்.

இதனால் சபையில் சிறிதளவு சலசலப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து சபாநாயகர், தனது அறிவிப்புக்கு பின்னர் உரை நிகழ்த்துமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அறிவித்தார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org